# எல்பிடிய பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்டம்பர் 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, எல்பிடிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களினது வட்டி ரூபா 30,206 இனால் மற்றும் மூலதன செலவுகள் ரூபா 12,297,985 இனால் குறைவாகக் கணக்கீடு செய்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டுகளின் போது பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 16,195,123 தொகை குறைவாக கணக்கீடு செய்திருந்தமையினால் ஆண்டிற்கான செலவுகள் மற்றும் கடன் கொடுத்தோர் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் ரூபா 43,150 தொகை குறைவாக மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 7,539,400 இற்கான பங்களிப்பு தொகை மற்றும் தென் மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்தில் இருந்து நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 204,640 தொகைக்கான கணினி துணைக் கருவிகளை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 664,006 இற்கான கடன் தவணைக் கொடுப்பனவுகளை ஆண்டிற்கான செலவு ஒன்றாக வரவு வைக்கப்பட்டிருந்தமையினால் ஆண்டிற்கான மிகை அந்த தொகையினால் குறைவடைந்திருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 88,220 தொகைக்கான பெக்கோ இயந்திர வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 91,453,761 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடு அட்டவணைகளில் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே இணக்கமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 11,821,477 தொகையாகும்.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

03 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் கூட்டுப்பெறுமதி ரூபா 620,949 தொகைக்கான வருமானம் மற்றும் மீளாய்வாண்டு இறுதி அளவில் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் ரூபா 12,393,273 தொகை பெறவேண்டியிருந்தது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான 10 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட 12 செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 2,458,383 தொகை வருட இறதி அளவிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

#### தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 3,379,291 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| **(அ)** | **1988 பிரதேச (நிதி மற்றும் நிருவாக) விதி** | | | |
| | (ை) | விதி 180 மற்றும் 182 | - | பணம் மற்றும் கலஞ்சியத்திற்கு பொறுப்பாக செயற்படும் உத்தியோகத்தர்கள் மற்றும் வருமானம் சேகரிக்கும் உத்தியோத்தர்களிடம் பிணைப் பணம் பெற்றிருக்கவில்லை. |
| | (ைை) | விதி 193 | - | பாதீட்டுடன் மிகைகள் மற்றும் பற்றாக்குறைக்கான காரணத்தை காட்டக்கூடிய கூற்றொன்று திசெம்பர் 31 திகதியில் உள்ள வாறு தயாரித்து கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |
| | (ைைை) | விதி 217 | | காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீதான பதிவேடு பீ.எஸ். 46 ஆம் படிவத்தின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ௌ) | விதி 218 | | சபைக்குச் சொந்தமான கட்டிடங் கள் ஆண்டிற்கு ஒருமுறையேனும் கணிப்பீடு மேற்கொண்டு அறிவித்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் ஔை பந்திகள் 5.1 மற்றும் 5.2 | | | தலைமை அலுவலகத்தின் ஊழியர்கள் 15 பேர் 466 நாட்கள் சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்தனர். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (ை) | நிதிப்பிரமாணம் 570 | 743,791 | 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் பலவின வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ைை) | நிதிப்பிரமாணம் 1646 | 2,001,982 | 2017 ஆண்டின் போது 26 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு |

| | |
|---|---|
| (ை) நிதிப்பிரமாணம் 1647 | சமர்பித்திருக்கவில்லை. சபைக்குச் சொந்தமான வாகனங்களுக்காக பயன்படுத்தப் பட்ட சம்பவக் குறிப்பேடுகள் நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. |

(ஈ) ஏனைய சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| (அ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30.்.2016 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை யின் பிரிவு 3.1 | சபைக்குச் சொந்தமான 16 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,664,055 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,080,170 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 3,653,000 | 3,653,000 | 3,861,509 | 11,664,450 | 3,553,000 | 3,553,000 | 4,116,121 | 10,287,262 |
| (ii) வாடகை | 4,710,000 | 4,710,000 | 3,764,392 | 3,197,920 | 4,235,000 | 4,235,000 | 3,849,332 | 2,252,312 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,051,000 | 1,051,000 | 1,108,879 | 22,560 | 1,051,000 | 1,051,000 | 1,113,395 | 30,720 |
| (iv) ஏனைய வருமானங்கள் | 5,537,000 | 5,537,000 | 9,742,120 | 1,515,806 | 4,920,200 | 4,920,200 | 3,795,277 | 1,081,866 |
| | 14,951,000 | 14,951,000 | 18,476,900 | 16,400,736 | 13,759,200 | 13,759,200 | 12,874,125 | 13,652,160 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 13,940,262 தொகைக்கான வீதவரியில் ரூபா 3,861,509 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையினால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவைவரி மீதி ரூபா 11,664,456 தொகையாக இருந்தது. நிலுவை தொகையினை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 வாடகை

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 2,252,312 தொகைக்கான நிலுவைக் கடை வாடகை வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 3,197,920 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்ததுடன், ஆண்டின் போது ரூபா 3,764,392 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. அவை பெற வேண்டிய தொகையில் 54 சதவீதத்தை கொண்டிருந்தது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,935,400 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,765,579 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செய்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைதத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### (ஆ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்

2016 ஆண்டின் போது பணம் கிடைத்திருந்த 07 செயற்திட்டங்கள் உட்பட ரூபா 1,611,000 தொகை பெறுமதியான 13 செயற்திட்டங்கள் 2018 ஆகஸ்ட் வரையும் செயற்படுத்தியிக்கவில்லை.

#### (இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(ை) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசரு செயற்திட்ட உதவியின் கீழ் இகலகந்த காணியில் 02 ஏக்கர் தரையில் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக கட்டிடத்தொகுதி ஒன்று நிர்மாணிக்கும் அலுவல்கள் 2008 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2018 மார்ச் 05 திகதி வரை அதற்காக ரூபா 2,058,123 தொகை செலவிடப்பட்டிருந்தது. நிர்மாண

வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும், வேலைகளை பூர்த்தி செய்து குப்பை முகாமைத்துவத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஒரு நாளைக்கு 05 தொன்கள் குப்பைகள் சேகரிக்கப்படுவதுடன், அந்த குப்பைகள் வகைப்படுத்தாமல் கட்டிடத்தில் உட்பகுதியில் மற்றும் வளவு பூராகவும் போடப்பட்டிருந்தது. இந்த குப்பைகளில் இருந்து துர்நாற்றம் வீசுவதுடன், கொசுக்கள், நுளம்புகள் நிறைந்திருந்ததுடன், எதிர்காலத்தில் சுகாதார சிக்கல்கள் ஏற்படுவதற்கு இடம் காணப்படுகின்றன என அவதானிக்கப்பட்டது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரழில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் சபையினால் இனங்கண்டிருப்பதாக அறிவித்திருந்த போதிலும், 2018 மே அளவிலும் இது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஆட்களிடமிருந்து ஒரே தடவையில் செலுத்தும் பணம் பெற்றுக்கொண்டு 1998 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தைக்கு அண்மையில் காணப்பட்ட 12 கடைகளை கொண்ட ஒற்றை மாடிக் கட்டிடம் மற்றும் 18 கடைகளைக் கொண்ட இரண்டு மாடி கட்டிடத்தை வாடகைக்கு கொடுப்பதற்கு 2018 மார்ச் 05 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஒரே தடவையில் பணம் செலுத்திய சில ஆட்கள் சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமல் கடைகள் நடாத்துவதுடன், கடைகளை வாடகைக்கு கொடுத்தலை சட்டரீதியாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 நவம்பர் 05 திகதி முதல் சேவையை விட்டு சென்றுள்ள சுகாதார தொழிலாளர்களிடம் சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 96,118 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

(இ) சபையினால் நிருவகிக்கும் நான்கு நூலகங்களில் அங்கத்தவர்களுக்கு வெளியே எடுத்து செல்வதற்காக 2003 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 101,183 தொகை பெறுமதியான 633 புத்தகங்களை மீளாய்வாண்டு இறுதிவரை திருப்ப பெற்றிருக்கவில்லை.

(ஈ) மின்சக்தி மற்றும் வலு அமைச்சினால் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய பீஈ∴02∴01 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் விதி விளக்கு பதிவேடு ஒன்று பேணப்பட்டு, புதிய வீதி விளக்குகளுக்காக மின்சார சபையின் அங்கீகாரத்தை பெறும் நடைபெற்றிருக்காமையால் வீதி விளக்குகள் பராமரிப்பதற்கு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 863,150 இற்கான செலவுகளை மீளளிப்பு செய்வதற்கு முடியாதிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(ை) ஆளணிக் கோப்பில் அங்கீகரிக்கப்பட்ட இரண்டாம் நிலை பதவிகளில் 05 ஊழியர்களின் மற்றும் ஆரம்ப நிலை பதவிகளில் 10 ஊழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ைை) 2006 ஏப்ரல் 10 திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு முரணாக சேர்க்கப்பட்டிருந்த 07 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,233,475 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) ஊழியர் கடன்**

ஓய்வூதியம் பெற்ற, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 11 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 981,406 இற்கான கடன்மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

சபைக்குச் சொந்தமான 56 கடைகள் மற்றும் 30 நடைபாதை சிறிய கடைகளுக்காக காணப்படும் வாடகை உடன்படிக்கைகள் 20 வருடங்களை விட பழமையானவைகளாக காணப்பட்டதுடன், உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய இலக்கம் தபாப.ஃபபாகொ.ஃ2010.ஃ01 ஆம் இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அந்த வாடகை உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் 2013 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 3,197,920 நிலுவை கடைவாடகை அறவீடு செய்திருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

சபையினால் பயன்படுத்தப்படும் இரும்பு உறுளை, கப் வண்டி மற்றும் டிபென்டர் என்பவற்றின் உரிமையினை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5.2 விளைவற்ற ∴ குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) டிரக்டர் வண்டி ஒன்று, ஜீப் வண்டி ஒன்று பழுதுபார்த்தல் வேலை மேற்கொள்ளப்படாமல் சபை வளவில் பாதுகாப்பற்ற நிலையில் நிறுத்தப்பட்டு காணப்பட்டது.

(ஆ) 2015 ஆண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை அமைச்சிலிருந்து கிடைத்திருந்த டிரக்டர் வண்டி ஓட்ட விடயங்கள் எதற்கும் பயன்படுத்தியிருக்கவில்லை.

(இ) டபள் கப் வண்டி ஒன்று மற்றும் டெய்லர் நீர் பவுசர் ஒன்றும் பயன்படுத்தப்படாமல் அகற்றியிருந்ததுடன், பழுதடைந்துள்ள வாகனங்களை பயன்படுத்தப்பட கூடிய விதமாக பழுதுபார்ப்பதற்கு மற்றும் திருத்தல் வேலை மேற்கொள்ளல் அல்லது

அப்புறப்படுத்துவது தொடர்பான 2015 ஜூலை 10 ஆந் திகதிய 2∴2015 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 09 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 23,456,978 இற்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அப்பெறுமதி 02 சதவீதம் முதல் 66 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

(ஆ) கடன்களை திருப்பி செலுத்துவதற்காக பாதீட்டின் மூலம் ரூபா 1,601,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், செலவுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளக கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு கணக்காய்வு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், போதியளவு கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 ஜூன் 09 ஆம் திகதி னுஆயு∴2009(ை) இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு மற்றும் பதிவேடுகள் பேணப்படல் | (ை) | நிதிக்கூற்றுக்களில் மற்றும் அதனொடு தொடர்புடைய அட்டவணைகளில் காணப்படும் வித்தியாசங்களை இனங்கண்டு சரிசெய்திருக்காமை. |
| | | (ைை) | காணாமல் போதல், சேதமடைதல் தொடர்பான பதிவேடு பேணப்படல். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | (ை) | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்படாமை |
| | | (ைை) | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு நடாத்தியிருக்காமை. |
| | | (ைைை) | சபைக்குச் சொந்தமான பொது இடங்கள் மீதான தகவல்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமை. |

| | | |
|---|---|---|
| (இ) | பதவியணி முகாமைத்துவம் | வெற்றிட பதவிகளை நிரப்புவதற்கு மற்றும் மிகை ஊழியர்களை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | வருமானம் சேகரித்தல் | (i) நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தியிருக்காமை. |
| | | (ii) குப்பைவரி அறவீடு செய்திருக்காமை. |
| (உ) | வாகன கட்டுப்பாடு | (i) வாகனங்களின் உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. |
| | | (ii) வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டிருக்காமை. |
| | | (iii) வாகனங்களை அகற்றியிருக்காமை |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டு மதிப்பீடு மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் தொடர்பாக கவனம் செலுத்தி பாதீட்டை திருத்தியிருக்காமை. |